<table>
<tr><td></td><td><u>பொள்ளாச்சி நகராட்சி</u><br><u>10 .12.2021 அன்று நடைபெற்ற அவசரக் கூட்டத்தில்</u><br><u>நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்</u><br><u>தீர்மான எண்.3164–3165</u></td></tr>
<tr><td>3164)</td><td>பொள்ளாச்சி நகராட்சியில் தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்புத் திட்டம் (TURIP) 2021-22ன் கீழ் (சிப்பம் – I) பொள்ளாச்சி நகராட்சியில் தார் சாலை சீரமைத்தல் ஸ்ரீ வாரி கார்டன், ஸ்ரீ வாரி கார்டன் குறுக்கு, ஸ்ரீ வாரி கார்டன் குறுக்கு தெரு, LIG காலனி-II, LIG காலனி-II குறுக்குத் தெரு, ரத்தினம் நகர் கிழக்கு மேற்கு 2 வது குறுக்கு தெரு, சுந்தரம் லே அவுட் வடக்கு தெற்கு, சுந்தரம் லே அவுட் கிழக்கு மேற்கு, சுந்தரம் லே அவுட் கிழக்கு மேற்கு, நியூ அழகப்பா லே அவுட் வடக்கு தெற்கு, கிருஷ்ணசாமி தெரு மற்றும் சேதமடைந்த சிமெண்ட் சாலைகளை பேவர் பிளாக் சாலைகளாக சீரமைத்தல் டி.கோட்டாம்பட்டி 2-வது தெரு, டி.கோட்டாம்பட்டி 5-வது தெரு, டி.கோட்டாம்பட்டி 6-வது தெரு, டி.கோட்டாம்பட்டி 7-வது தெரு ஆகிய வீதிகளில் தார்த்தளம் அமைத்தல் பணிக்கு ரூ.100.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் நிர்வாக அனுமதி ந.க.எண்.24886/2021/இ1, நாள்.19.11.2021 பெறப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு 07.12.2021–ல் இரு உறை முறையில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் இரண்டும் தொழில்நுட்ப தகதி பெற்றுள்ளதால் அவைகளின் விலைப்புள்ளி 09.12.2021 அன்று திறக்கப்பட்டு ஒப்பு நோக்கு பட்டியல் கீழ்கண்டவாறு தயார் செய்யப்பட்டுள்ளது.<br><br>
<table>
<tr><td>1</td><td>திரு.S.பார்த்திபராஜன்,பொள்ளாச்சி.</td><td>மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 4.90 % அதிகம் .</td></tr>
<tr><td>2</td><td>M/S.ஸ்ரீ பிரியா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், பொள்ளாச்சி.</td><td>மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 7.90 % அதிகம்.</td></tr>
</table><br>
இவற்றில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 4.90% அதிகமாகவும் மற்ற ஒப்பந்தப்புள்ளியை விட குறைவானதாகவும் விலை விகிதம் கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் S,பார்த்திபராஜன், பொள்ளாச்சி அவர்களிடம் 09.12.2021 அன்று விலை குறைப்பு கோரப்பட்டது.<br>
ஒப்பந்ததாரர் தனது விலை குறைப்பு கடிதத்தில், இப்பணிக்கான வ.எண். 3-ல் ரூ.1495/- (M3) என ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டதனை ரூ. 5/- மட்டும் குறைத்து ரூ.1490/- (M3) என்றவாறு ஒரு இனத்திற்கு விலை குறைப்பு செய்து கொடுத்துள்ளார். விலை குறைப்பு செய்யப்பட்டதற்கு பின்பு 4.88% அதிகமாகவும் மற்ற ஒப்பந்தப்புள்ளியை விட குறைவாகவும் உள்ளது. விலை விகித ஒப்பந்தப்புள்ளியில் தார்சாலை பணிக்கான மூலப்பொருட்கள், டீசல் விலை உயர்வு மற்றும் ஆட்கள் கூலி உயர்வு காரணமாக மேலும் விலை குறைப்பு செய்ய இயலாது எனவும், மேற்குறிப்பிடப்பட்ட 4.88% விகிதத்தில் பணியினை மேற்கொள்ள அனுமதி கோரியுள்ளார்.<br>
எனவே, வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 4.88% அதிகமானதாகவும் மற்ற ஒப்பந்தப்புள்ளியை விட குறைவானதாகவும் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள S,பார்த்திபராஜன், பொள்ளாச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>
<u>அலுவலகக்குறிப்பு:</u><br>
1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
2. முதல் அழைப்பாக வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 4.88% அதிகமானதாகவும் மற்ற ஒப்பந்தப்புள்ளியை விட குறைவானதாகவும் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள S,பார்த்திபராஜன், பொள்ளாச்சி அவர்கள் தார்சாலை பணிக்கான மூலப்பொருட்கள் உயர்வு, டீசல் விலை உயர்வு மற்றும் ஆட்கூலி உயர்வு போன்ற காரணங்களால் ஒப்பந்தப்புள்ளியில் இதற்கு மேலும் விலை குறைக்க இயலாது என தெரிவித்துள்ளார்.<br>
3. இப்பணி திட்டப்பணியாக இருப்பதாலும், குறித்த காலத்திற்குள் பணிகள் முடிக்க வேண்டியுள்ளதாலும், ஒப்பந்ததாரர் S,பார்த்திபராஜன், பொள்ளாச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.<br>
4. மேற்படி பணிக்கு மதிப்பீட்டை விட கூடுதலாக ஆகும் செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.<br>
ந.க.எண்.5231/2019/இ1</td></tr>
</table>

**3165)** பொள்ளாச்சி நகராட்சியில் தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்புத் திட்டம் (TURIP) 2021-22-ன் கீழ் (சிப்பம் – II) பொள்ளாச்சி நகராட்சியில் தார்சாலை அமைத்தல் SBI காலனி முதல் LIG காலனி முதல் குறுக்கு தெரு வரை, டி.கோட்டாம்பட்டி வீதி எண்.13, டி.கோட்டாம்பட்டி வீதி எண்.20, LIG காலனி 4-வது குறுக்கு தெரு PA கார்டன், ரத்தினம் நகர் வடக்கு தெற்கு, ரத்தினம் நகர் கிழக்கு மேற்கு, லட்சுமி புரம் 30 வடக்கு பகுதி தெற்கு ரோடு மற்றும் சேதமடைந்த சிமெண்ட் சாலைகளை பேவர் பிளாக் சாலைகளாக சீரமைத்தல் டி.கோட்டாம்பட்டி வீதி எண்.8, கோனப்பர் வீதி முதல் இமான்கான் கான்கிரிட் ரோடு வரை, மகாத்மா காந்தி மண்டபம் முதல் வெங்கட்ரமணன் பாதை வரை, காரைக்கால் அம்மையார் பாதை, காரைக்கால் அம்மையார் பாதை முதல் குறுக்கு, காரைக்காள் அம்மையார் பாதை 2-வது குறுக்கு, SMJ 1ST பாதை வடக்கு தெற்கு, SMJ 2nd கிழக்கு மேற்கு ஆகிய வீதிகளில் தார்த்தளம் அமைத்தல் பணிக்கு ரூ.100.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் நிர்வாக அனுமதி ந.க.எண்.24886/2021/இ1, நாள்.19.11.2021 பெறப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு 07.12.2021–ல் இரு உறை முறையில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் இரண்டும் தொழில்நுட்ப தகதி பெற்றுள்ளதால் அவைகளின் விலைப்புள்ளி 09.12.2021 அன்று திறக்கப்பட்டு ஒப்பு நோக்கு பட்டியல் கீழ்கண்டவாறு தயார் செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1 | திரு.S.பார்த்திபராஜன்,பொள்ளாச்சி. | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 4.95 % அதிகம். |
| 2 | M/S.ஸ்ரீ பிரியா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், பொள்ளாச்சி. | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 8.11.% அதிகம். |

**இவற்றில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 4.95% அதிகமாகவும் மற்ற ஒப்பந்தப்புள்ளியை விட குறைவானதாகவும் விலை விகிதம் கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் S,பார்த்திபராஜன், பொள்ளாச்சி அவர்களிடம் 09.12.2021 அன்று விலை குறைப்பு கோரப்பட்டது.**

**ஒப்பந்ததாரர் தனது விலை குறைப்பு கடிதத்தில், இப்பணிக்கான வ.எண். 3-ல் ரூ.1496/- என ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டதனை ரூ. 6/- மட்டும் குறைத்து ரூ.1490 (M3) என்றவாறு ஒரு இனத்திற்கு விலை குறைப்பு செய்து கொடுத்துள்ளார். விலை குறைப்பு செய்யப்பட்டதற்கு பின்பு 4.92% அதிகமாகவும் மற்ற ஒப்பந்தப்புள்ளியை விட குறைவாகவும் உள்ளது. விலை விகித ஒப்பந்தப்புள்ளியில் தார்சாலை பணிக்கான மூலப்பொருட்கள், டீசல் விலை உயர்வு மற்றும் ஆட்கள் கூலி உயர்வு காரணமாக மேலும் விலை குறைப்பு செய்ய இயலாது எனவும், மேற்குறிப்பிடப்பட்ட 4.92% விகிதத்தில் பணியினை மேற்கொள்ள அனுமதி கோரியுள்ளார்.**

**எனவே, வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 4.92% அதிகமானதாகவும் மற்ற ஒப்பந்தப்புள்ளியை விட குறைவானதாகவும் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள S,பார்த்திபராஜன், பொள்ளாச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.**

**அலுவலகக்குறிப்பு:**

1. **மன்றம் அனுமதி வழங்கலாம்.**
2. **முதல் அழைப்பாக வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 4.92% அதிகமானதாகவும் மற்ற ஒப்பந்தப்புள்ளியை விட குறைவானதாகவும் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள** S,பார்த்திபராஜன், பொள்ளாச்சி அவர்கள் தார்சாலை பணிக்கான மூலப்பொருட்கள் உயர்வு, டீசல் விலை உயர்வு மற்றும் ஆட்கூலி உயர்வு போன்ற காரணங்களால் ஒப்பந்தப்புள்ளியில் இதற்கு மேலும் விலை குறைக்க இயலாது என தெரிவித்துள்ளார்.
3. **இப்பணி திட்டப்பணியாக இருப்பதாலும், குறித்த காலத்திற்குள் பணிகள் முடிக்க வேண்டியுள்ளதாலும், ஒப்பந்ததாரர்** S,பார்த்திபராஜன், பொள்ளாச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
4. **மேற்படி பணிக்கு மதிப்பீட்டை விட கூடுதலாக ஆகும் செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.**

**ந.க.எண்.5231/2019/இ1**